# மே – 02– புதன்

## புனித அத்தனாசியுஸ்

## நானே திராட்சைக் கொடி, நீங்கள் அதன் கிளைகள்

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 15 : 1–6

அக்காலத்தில் யூதேயாவிலிருந்து வந்த சிலர், நீங்கள் மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்து கொள்ளாவிட்டால் மீட்படைய முடியாது" என்று சகோதரர் சகோதரிகளுக்குக் கற்பித்து வந்தனர். அவர்களுக்கும் பவுல், பர்னபா ஆகியோருக்குமிடையே பெருங் கருத்துவேறுபாடும் விவாதமும் உண்டாயின. எனவே பவுலும் பர்னபாவும் அவர்களுள் சிலரும் எருசலேமுக்குச் சென்று, திருத்தூதர்களிடமும் மூப்பர்களிடமும் இந்த சிக்கலைக் குறித்துக் கலந்து பேசுமாறு நியமிக்கப்பட்டனர். அங்கிருந்து திருச்சபையார் அவர்களை வழியனுப்பி வைத்தனர். அவர்கள் பெனிசியா, சமாரியா வழியாகச் சென்று பிற இனத்தவர் மனந்திரும்பிய செய்தியை எடுத்துரைத்தார்கள். இது சகோதரர் சகோதரிகள் அனைவரிடமும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் எருசலேம் வந்தபோது திருச்சபையாரும், திருத்தூதர்களும், மூப்பர்களும் அவர்களை வரவேற்றார்கள். அப்போது கடவுள் தங்கள் வழியாகச்செய்த அனைத்தையும் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் பரிசேயக் கட்சியினருள் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட சிலர் எழுந்து, "அவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ளவேண்டும் மோசேயினது சட்டத்தைக் கடைப்பிடிக்க அவர்களுக்குக் கட்டளையிடவேண்டும்" என்று கூறினர். இதனை ஆய்ந்து பார்க்கத் திருத்தூதரும் மூப்பரும் ஒன்றுகூடினர்.

**பதில்பாடல் :** அகமகிழ்ந்து ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்

### நற்செய்தி : யோவான் 15 : 1 – 8

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது : "உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்.என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார்.நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்.நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது.நானே திராட்சைச் செடி் நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும்.நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது'' என்றார்.

**தியானம்:** ஒரு மரத்தினுடைய சக்தி அல்லது ஒரு மரத்தினுடைய வலு அந்த மரத்தினுடைய வேர்களில் இருக்கின்றது. வெளியிலே நாம் காண்கின்ற பசுமையான மரத்தினுடைய ஆற்றல் மண்ணுக்குள் மறைந்திருக்கும் வேர்களின் தண்மையைப் பொறுத்து அமைகின்றது. ஒரு மரம் எவ்வளவு பெரியதாக இருக்கின்றது, எவ்வளவு பசுமையாக இருக்கின்றது, எவ்வளவு அழகாக இருக்கின்றது, எவ்வளவு கிளைகளைக் கொண்டிருக்கின்றது என்பதில் அல்ல, மாறாக அந்த மரத்தைத் தாங்கக் கூடிய வேர்கள் எவ்வளவு ஆழமாக, உறுதியாக இருக்கின்றது என்பதைப் பொறுத்துத்தான் அதனுடைய வாழ்நாள்களும் அது எதற்காக இந்த பூமியில் உருவாக்கப்பட்டதோ அதனுடைய பலனையும் அது தர முடியும். ஒரு மரத்தினுடைய வேர்கள்தான் அந்த மரத்தை வாழவைக்கின்றது. இதையே தூய பவுலடியார் பின்வருமாறு கூறுகின்றார், நீங்கள் வேரைத் தாங்கவில்லை, வேர்தான் உங்களைத் தாங்குகின்றது என்பதை மறவாதீர்கள். (உரோ.11:18) அதே போல ஒரு மனிதனுடைய வாழ்க்கை எவ்வளவு பிரமாண்டமாக, பொருளாதார வசதிகளோடு, அறிவு ஆற்றலோடு, பகட்டாக வாழ்கின்றான் என்பதில் அல்ல மாறாக அவனை உருவாக்கிய தேவனில் எவ்வளவு தூரம் உறவு கொண்டு வாழ்கின்றான், அவரோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு வாழ்கின்றான் என்பதில்தான் அவனுடைய வாழ்க்கையின் அர்த்தம் நிறைவுபெறும். மனிதன் வாழ்வதற்காக கொடுக்கப்பட்ட பொருள்கள், உறவுகள், சமூக அந்தஸ்துகள் இவைகள் எல்லாம் மரத்திலே காணப்படும் கிளைகள், கனிகள் போல இவைகள் மரத்திற்கு அழகு தருபவையே அன்றி வாழ்வு கொடுக்காது. மண்ணுக்குள் மறைந்திருக்கும் வேர் மரத்தைத் தாங்கி, அதற்குத் தேவையான சத்துக்களை, ஆற்றலை உள்ளிருந்து வழங்குவதுபோல விண்ணகத்தில் இருக்கும் தந்தையோடு நாம் கொண்டிருக்கும் ஜெப ஒன்றிப்பு, இறைவார்த்தை வாசிப்பு, இறைப்பிரசன்னம், ஆன்மீக தேடல்கள் இவைகள்தான் நம்முடைய வாழ்க்கைக்கு உயிரையும், நம்முடைய வாழ்வுக்கான பொருளையும் நமக்குத் தருகின்றது. கொடியோடு இணைந்திருக்கும் வரைதான் செடிக்குப் பாதுகாப்பு அதைப்போல கடவுளோடு நாம் கொண்டுள்ள உறவை பலப்படுத்திக் கொள்ளும்வரைதான் நம்முடைய வாழ்வு பாதுகாப்பாக அமையும்.